திருச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சித்தா ஆயுர்வேத அக்குபஞ்சர் மருத்துவர்கள் சார்பில் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் 24வது மாநில மாநாட்டை, குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். இதில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், சேர்மன் துரைராஜ், மண்டலக்குழுத் தலைவர்கள் துர்கா தேவி, விஜயலட்சுமி கண்ணன், பகுதிச் செயலாளர் மோகன்தாஸ், மாவட்ட துணைச் செயலாளர் முத்துச் செல்வம், இளைஞரணி ஆனந்த், தில்லை நகர் கண்ணன், டோல்கேட் சுப்பிரமணி, கவுன்சிலர்கள் கலைச்செல்வி, மகளிர் அணி கவிதா, வட்டச் செயலாளர் தனசேகரன், வாமடம் சுரேஷ், அனைத்திந்திய சித்த மருத்துவ சங்க தலைவர் டாக்டர் சுப்பையா பாண்டியன், டாக்டர் தமிழரசி சுப்பையா, டாக்டர் விஜய் கார்த்திக் உட்பட மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாநகராட்சி, 15 வேலம்பாளையத்தில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், பகுதி கழக செயலாளர் கொ.ராமதாஸ் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்டத்தில்

‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தின் கீழ் 4,715 மாணவர்களுக்கு வங்கி ஏ.டி.எம். கார்டுகள்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், ஆக. 13- தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதல்வர் அவர்கள் கோவை மாவட்டத்தில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடந்து, திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகேயுள்ள பொங்கலூர் ஒன்றியம் அவினாசி பாளையம் ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி அரங்கில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் நா.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் 4715 மாணவர்களுக்கு வங்கி ஏ.டி.எம். கார்டுகளை வழங்கினர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக கல்விக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் தமிழ் நாட்டில் உயர் கல்வியில் பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட • “மூவலூர் இராமாமிர்தம் •அம்மையார் உயர் கல்வி உறுதி திட்டம்” (புதுமைப் பெண் திட்டம்) பெண்களின் உயர் கல்வியில்பெரும்முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு, பட்டயப்படிப்பு, பட்டப் படிப்பு. தொழிற்கல்வி ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1,000 அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த மாணவிகள் ஏற்கனவே பிற கல்வி உதவித் தொகை பெற்று வந்தாலும் இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம். இத்திட்டத்தின் நோக்கம் பெண்களுக்கு உயர் கல்வி அளிப்பதன் மூலம் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல். குழந்தை திருமணத்தை தடுத்தல், குடும்ப சூழ்நிலை மற்றும் வறுமை காரணமாக மேற்படிப்பு படிக்க இயலாத மாணவிகளுக்கு பொருளாதார ரீதியாக உதவுதல், பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தை குறைத்தல், பெண் குழந்தைகளின் விருப்ப தேர்வுகளின் படி அவர்களின் மேற்படிப்பை தொடர ஊக்குவித்தல், உயர்கல்வியினால் பெண்களின் திறமையை ஊக்கப்படுத்தி அனைத்து துறைகளிலும் பங்கேற்க செய்தல், பெண்களுக்கான தொழிற் வாய்ப்புகளை அதிகரித்தல். பெண்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்தல். அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க வழி வகை செய்யும், இத்திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் 05.09.2022 அன்று தொடங்கி வைத்தார்.

இத்திட்டம் பெண்களின் உயர்கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் 68 கல்லூரிகளில் 10,422 மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். அதே போல், அரசு பள்ளிகளில் பயின்ற ஏழை, எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடவும், அரசு பள்ளி. மாணவர்களின் உயர் கல்வி சேர்க்கையை உயர்த்திடவும் “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தை கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். “தமிழ்ப்புதல்வன்” என்னும் தொலை நோக்கு திட்டத்தினை செயல்படுத்தும் போது மாணவர்கள் கல்லூரியில் அதிக அளவில் சேர்வார்கள். இது சேர்க்கை விகிதம் அதிகமாவதற்கு வழிவகை செய்யும். அரசு பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை விகிதத்தினை அதிகப்படுத்தும். மாணவர்கள் பாட புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி கல்வியை மெறுகேற்றிட உதவும். இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி நமது மாநிலம் மற்றும் நாட்டின் எதிர்கால தூண்களாக திகழ்வார்கள். கல்வி இடை நிற்றலை தடுக்க முடியும். 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவர்கள், 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர் கல்வி பெறும் மாணவர்கள் இத்திட்டத்தில் கலை மற்றும் அறிவியல் பிரிவு, பொறியியல் பிரிவு, மருத்துவ படிப்பு, சட்டம் சார்ந்த படிப்புகள். ஒருங்கிணைந்த பாட பிரிவு, இத்திட்டத்தில் கீழ் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும். ஒரே குடும்பத்திலிருந்து எத்தனை மாணவர்கள் தகுதி பெற்றிருப்பினும் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயனடைய விண்ணப்பிக்கலாம். இந்த மாணவர்கள் ஏற்கனவே பிற கல்வி உதவித்தொகை பெற்று வந்தாலும் இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம். முதல் கட்டமாக திருப்பூர் மாவட்டத்தில் 43 கல்லூரிகளில் 4715 மாணவர்கள் பயன் பெறுகின்றனர் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருப்பூர் சார் ஆட்சியர் சௌம்யா ஆனந்த், பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் ரஞ்சிதா தேவி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் துர்கா பிரசாந், ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி தாளாளர் கோவிந்தசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.பாலுச்சாமி, பொ.அசோகன் (பொங்கலூர்), நா.சோமசுந்தரம், சு.கிருஷ்ணமூர்த்தி (பல்லடம்), நகர கழக செயலாளர் ந.ராஜேந்திரகுமார், கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் அக்ரோ சீனிவாசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.கே.கனகராஜு, ஒன்றிய கவுன்சிலர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் லோகு பிரசாத், ஒன்றிய துணை செயலாளர் லதா வெங்கிடாசலபதி உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சியிலிருந்து கூடுதல் அரசுப் பேருந்து சேவை!

வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கள்ளக்குறிச்சி, ஆக.13. கள்ளக்குறிச்சியில் இருந்து சென்னை, அடரி, தாவடிப்பட்டு உள்ளிட்ட இடங்களுக்கு கூடுதல் அரசு பஸ் சேவையை வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கொடி அசைத்து வைத்து தொடங்கி வைத்தார்.

திராவிட மாடல் நல்லாட்சியில் பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் கள்ளக்குறிச்சி பஸ் நிலையத்தில் இருந்து அடரி, தாவடிப்பட்டு, சென்னைக்கு கூடுதலாக 3 அரசு பஸ் சேவைக்கான தொடக்க விழா நடைபெற்றது,பஸ் நிலையத்தில் நடைபெற்ற விழாவுக்கு தெற்கு மாவட்ட கழக செயலாளர் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தலைமை தாங்கி கொடியசைத்து வைத்து 3 வழித்தடங்களில் கூடுதல் அரசு பஸ்களை இயக்கி வைத்தார்.

அதில் ஒரு டவுன் பஸ் சானது கள்ளக்குறிச்சியிலிருந்து காரனூர், குதிரை ச்சந்தல், நல்லாத்தூர், தோப்பூர்,சுகர்மில், கச்சிராயபாளையம், அம்மாப்பேட்டை, பால்ராம்பட்டு, கரடிசித்தூர் வழியாக தாவடி பட்டுக்கும், மற்றொரு டவுன் பஸ் கள்ளக்குறிச்சியிலிருந்து விருகாவூர், அசகளத்தூர் வழியாக அடரிக்கும், அதேபோல் கள்ளக்குறிச்சியிலிருந்து உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், திண்டிவனம் வழியாக கிளாம்பாக்கம் தாம்பரத்துக்கு மற்றொரு அரசு பஸ்சும் இயக்கி வைக்கப்பட்டது.

இவ்விழாவில் மாவட்ட ஊராட்சிக் குழுதலைவர் புவனேஸ்வரி பெருமாள், கள்ளக்குறிச்சி நகரமன்ற தலைவர் ஆர்.சுப்ராயலு, ஒன்றிய கழக செயலாளர்கள் வெங்கடாசலம், சத்தியமூர்த்தி, கனகராஜ், நெடுஞ்செழியன்,தெற்கு மாவட்ட கழக அவை தலைவர் ராமமூர்த்தி, மாவட்டக் கழக துணை செயலாளர் காமராஜ், நகர துணை செயலாளர் அப்துல் ரசாக் மற்றும் அரசு போக்குவரத்து கழக கிளை மேலாளர்கள், மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியத்தில் பல்வேறு ஊராட்சிகளில் சி.என்.அண்ணாதுரை எம்.பி. வாக்காளர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., ஒன்றியச் செயலாளர் உமா கன்ரங்கம், வி.வடிவேல், சம்பத்குமார் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

நாகையில் மாவட்ட அளவிலான

அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்!

அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! என்.கௌதமன் - உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, ஆக. 13 - நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக முதன்மை கூட்ட அரங்கில் மாவட்ட அளவிலான அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர்ப.ஆகாஷ், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன், நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகமது ஷா நவாஸ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகைமாலி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் வளர்ச்சித் திட்டப் பணிகளை கண்காணித்து துரிதப்படுத்திட அமைச்சர் பெருமக்களை நியமித்துள்ளார்கள்.

அதனடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பாக துறை வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மக்களிடம் பெறப்படும் கோரிக்கை மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும். நகராட்சி, பேரூராட்சி, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளை தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அனைத்து வளர்ச்சித்திட்டப்பணிகளும் தொடர்ந்து கண்காணித்து செயல்படுத்திட தொடர் நடவடிக்கையாக மேற்கொள்ளப்படும். குறிப்பாக சாதாரண மக்களுக்கு தேவையான இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்டவைகள் குறித்த பயனாளிகளை தேர்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

முன்னதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் செயல்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சார்பில் இணைமானிய நிதியாக 9 பயனாளிகளுக்கு ரூ.53 இலட்சம் மதிப்பீட்டில் வங்கி கடனுக்கான ஆணையினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்.

நிகழ்சியில் நாகை நகரக் கழகச் செயலாளர், நகர மன்றத் தலைவர் இரா. மாரிமுத்து, வட்டார ஆத்மா குழுத் தலைவர்கள் மகா குமார், செல்வ செங்குட்டுவன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டத்தில்

3 ஆண்டுகளில் 15 ஆயிரம் இலவச வீட்டுமனை பட்டாக்கள்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கி பேச்சு!

திண்டிவனம், ஆக. 13 - விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சி துறை சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் மயிலம் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி மயிலம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை வகித்தார்.துணை சேர்மன் புனிதா ராமஜெயம் முன்னிலை வகித்தார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் கலந்து கொண்டு 8 கோடியே 42 லட்சத்து 28 ஆயிரத்து 200 ரூபாய் மதிப்பீட்டில் 238 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான உத்தரவு ஆணைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்;

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியில் தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை இந்தியாவிலேயே முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

ஒன்றிய அரசின் நிதி உதவி இல்லாமல் முதன் முதலில் கலைஞர் தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகளை கட்டிக் கொடுத்த பெருமை கலைஞருக்கு அன்றும் இன்றும் இருக்கிறது.

அவர் வழியில் இன்று திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு கலைஞர் கனவு இல்லம் வீடுகள் கட்டும் திட்டத்தில் தமிழக முழுதும் 1 லட்சம் வீடுகள் கட்டுவதற்கும்

விழுப்புரம் மாவட்டத்தில் 4700 வீடுகள் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் ஒரு வீட்டிற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் முழுவதும் தமிழக அரசின் நிதியில் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி.மஸ்தான் ஒன்றிய அரசு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு கொடுக்கும் நிதியை காட்டிலும் 2 மடங்கு கூடுதலாக தொகை கொடுத்து கிராமத்தில் தொகுப்பு வீடுகளை கட்டுவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகவும், கடந்த 3 ஆண்டுகளில் விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 15ஆயிரம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறினார்.

இதில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.சேகர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன்,ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன்,செழியன்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் வெண்பா,மாவட்ட கவுன்சிலர் விஜயன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் அன்சாரி, செந்தில் குமார், விவசாய அணி துணை தலைவர் நெடி.சுப்ர மணியன், மாவட்ட பிரதிநிதிகள் சேகர், பிரகாஷ், கவுன்சிலர்கள் பரிதா சம்சுதீன், உமா ஞானசேகர், கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள்அருணா, பாக்கியராஜ், செந்தில்குமார் மற்றும்தி.மு.க. நிர்வாகிகள் பிரபு, ரமேஷ், உதயவாணன், அன்பு சேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் இராமதாஸ் நன்றி கூறினார்.

தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களுடன்

தகவல் தொழில்நுட்பத் துறைக்கு தனியாக குழு அமைத்திடுக!

மக்களவையில் மசோதாவை முன்மொழிந்து சி.என்.அண்ணாதுரை பேச்சு!

புதுடெல்லி, ஆக. 13- மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை தகவல் தொழில் நுட்பத்திற்கு குழு அமைப்பது தொடர்பான மசோதா ஒன்றை ஏற்கனவே தாக்கல் செய்திருந்தார். அந்த மசோதா கடந்த வாரம் மக்களவை முடியும் தருவாயில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்த மசோதா மீது சி.என்.அண்ணாதுரை பேசியதாவது:-

இந்த நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறை மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக அதை முறைப்படி கட்டமைக்க குழு அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட இந்த மசோதாவை முன்மொழிகிறேன்.

அந்தக் குழுவில் தலைவர் ஒருவரும் நான்கு உறுப்பினர்களும் உரிய தகுதியின் அடிப்படையில் ஒன்றிய அரசு நியமிக்க வேண்டும்.

வருங்கால வளர்ச்சிக்கு தகவல் தொழில்நுட்பம் தான் மூலகாரணமாக

இருக்கும். கல்வி, சுகாதாரம், வேளாண்மை, விளையாட்டு, பாதுகாப்பு, நலன் மற்றும் பல்லுயிர் தொடர்பான அனைத்தின் வளர்ச்சிக்கும் அதுதான் மூலகாரணமாக அமையும்.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு தகவல் தொழில் நுட்பத்தில் தீவிர கவனம் செலுத்தி மின் ஆளுமை மற்றும் அரசு துறைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

விஞ்ஞானிகளுக்கு தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு, மற்றுமுள்ள மேலாண்மைதுறைகளுக்கு அது சிறந்த வாய்ப்பை ஏற்படுத்துகிறது. செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் அனைத்து சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களும், நாகரிக வளர்ச்சியும் ஏற்பட வாய்ப்புண்டு.

10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையுள்ள நகரங்களிலும் மேலும் வாய்ப்புள்ள நகரங்களிலும் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்க அந்தக் குழு முன்வர வேண்டும்.

இன்றைய நிலையில் நாட்டில் அதிவேகமாக வளர்ந்து வரும் நிலையில் உள்ளது தகவல் தொழிநுட்பம். அந்தத் துறை மென்மேலும் வளர நல்ல வாய்ப்பு உள்ள காரணத்தால் அதற்கு அதிக மூலதனம் தேவைப்படுகிறது.

தமிழ்நாட்டில் முதல்வர் தளபதி அவர்கள், தகவல் தொழில்நுட்பத்திற்கு சிறந்த முறையில் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருவதோடு புதிய முதலீடுகள் பெற ஊக்கமளித்து வருகிறார். அரசாங்கத்திற்கு அதிக அளவு வருமானம் ஈட்டித் தரும் தொழிலாக ஐ.டி. இருந்து வருகிறது.

தொழில் நுட்பத் துறைக்கு தேசிய அளவில் கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் உள்ள பல்வேறு மாநிலங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டக் கூடியது இந்த தகவல் தொழில்நுட்பத் துறை. குறிப்பாக வளர்ச்சி அடைந்த மாநிலங்களான தமிழ்நாடு உள்ளிட்டவைகளுக்கு மிக மிக அத்தியாவசியத் தேவையாகும்.

தமிழகத்தை ஒரு ட்ரில்லியன் டாலர் மாநிலமாக உயர்த்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து செயல்பட்டு வருகிறார் என்பதை தெரிவிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அத்துடன் உலகளாவிய தகவல் தொழில் நுட்பத் துறையின் உறைவிடமாக தமிழ்நாட்டை மாற்ற அவர் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே தமிழ்நாடு அரசு ஐ.டி.பூங்காக்களை தமிழ்நாடு முழுவதும் அமைத்து அத்துறை தமிழ் நாட்டில் முக்கியத்துவம் பெற்று வருகிறது என்பதை தெரிவித்து இந்த மசோதாவை முன்மொழிகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.